MC No.2/2023 ம.சா.1 : முகமது கனி த/பெ.சேக் முகமது நாள்: 09.10.2025

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால், மூன்று ஆண் குழந்தைகள் உள்ளனர். எனக்கு பெண் குழந்தைகள் கிடையா. எனது மூத்த மகன் திருமணம் முடித்து தஞ்சாவூர் மாவட்டம் ஆவணத்தில் வசித்து வருகிறார். எனது மூத்த மகன் பொறியியல் படித்துவிட்டு தற்போது வெளிநாட்டில் உள்ளார் என்றால், சவுதியரேபியாவில் வேலை பார்த்துவிட்டு உடல் நிலை சரியில்லாமல் வந்துவிட்டார். இன்னொரு மகன் ஆட்டோ ஓட்டிவருகிறார். இரண்டாவது மகன் தற்சமயம் வெளிநாடு சென்றுள்ளார். எனது மூத்தமகன் வெளிநாட்டில் இருந்துவருகிறார் என்றும், அவர் வெளிநாட்டில் மாதம் இரண்டு இலட்சம் ரூபாய் சம்பாதித்து வருகிறது எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு சரியான வேலை அமையவில்லை.

2) இரண்டாவது மகன் தற்போது வெளிநாட்டில் வேலை பார்த்து ரூபாய் ஐம்பதாயிரம் சம்பாதிக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், சரியல்ல. எனது மனுவில் நான் எனது மூத்த மகனையும், இரண்டாவது மகனையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால், சரிதான். எனக்கு சொந்தமான வீடு அறந்தாங்கி அப்துல் ஹமீது தெருவில் இருந்தது என்றால், சரிதான். மேற்படி வீட்டை விற்றுவிட்டு எனது மனைவியின் மருத்துவ செலவு செய்தேன். நான் சொல்வது தவறு என்றும், மேற்படி வீட்டை விற்றுவிட்டு எனது மூத்தமகனை பொறியியல் படிக்கும் செலவுக்கு பணத்தை உபயோகித்தேன் என்று சொன்னால், சரியல்ல.

3) ஆஜர் எதிர்மனுதாரர் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில்தான் படித்தார் என்று சொன்னால், சரிதான். பின்னர் அவர் பாலிடெக்னிக் கல்லூரியில் பயின்றபோது முதல் வருடம் நான்காயிரம் நான் கட்டி படிக்கவைத்தேன் என்று சொன்னால், சரிதான். அந்த் வருடம் எதிர்மனுதாரருக்கு அரசு உதவி தொகை ரூபாய் நான்காயிரம் கிடைத்ததை அவர் என்னிடம் ஒப்படைத்தார் என்று சொன்னால், சரியல்ல. எதிர்மனுதாரர் மேற்படி பாலிடெக்னிக் கல்லூரியில் இரண்டாம், மூன்றாம் வருடம் படிக்கும்போது வெளியில் பார்டைமாக வேலை பார்த்து படித்தார் என்றால், சரிதான். மேலும் எதிர்மனுதாரர் எம்.காம். வரை அவரது சொந்த செலவில் படித்தார் என்று சொன்னால், சரியல்ல.

4) எதிர்மனுதாரர் அவரது சொந்த செலவில்தான் மேற்படிப்பு படித்தார் என்றாலும், வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல. 2013 ஆம் ஆண்டு மாவட்ட தொழில் முனைவோர் மையத்தில் கடன் பெற்று ஈ-சேவை மையம் நடத்திவந்தார் என்றால், சரிதான். தற்போது எதிர்மனுதாரர் வீடுகட்டியுள்ள இடம் அரசு புறம்போக்கு இடம் என்று சொன்னால், சரிதான். அரசு புறம்போக்கு இடத்தில் வீடு கட்டினால் அரசு தரப்பில் B-Memo தருவார்கள் என்று சொன்னால், சரிதான். நான்தான் வாங்கித்தந்தேன். மேற்படி இடத்தில் எதிர்மனுதாரர் வீடுகட்டி அவர் பெயரில் ஆவணங்களை வைத்து இருந்து வருகிறார் என்று சொன்னால், சரியல்ல.

5) 2007 ஆம் ஆண்டுதான் எனது மனைவி இறந்தார் என்றால், சரிதான். எனது பெரிய மகனுக்கு 2008 இல்தான் திருமணம் நடைபெற்றது என்றால், சரிதான். இரண்டாவது மகனுக்கும் எனது செலவில் நான்தான் திருமணம் செய்துவைத்தேன் என்றால், சரிதான். எதிர்மனுதாரருக்கு நான் எவ்வித திருமண செலவும் செய்யவில்லை என்றாலும், அவர் தனது சொந்த செலவில்தான் திருமணம் செய்துகொண்டார் என்றாலும், சரியல்ல. எதிர்மனுதாரர் சுயமாக சம்பாதித்து 2015 வருடம் திருமணம் செய்துகொண்டார் என்றால், சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது மனைவி நகையினை ரூபாய் மூன்று இலட்சத்திற்கும், தனி நபரிடம் ஒரு இலட்சம் கடன் பெற்றும் கணினி மையம் நடத்தி வருகிறார் என்றால், சரிதான். அதன் மூலம் அவருக்கு மாதம் ரூபாய் பதினைந்தாயிரம் வரை இலாபம் வருகிறது என்றால், சரியல்ல. அந்த வருமானத்தை வைத்து அவரது குடும்ப செலவு, மின் கட்டணச் செலவு, கடை வாடகை, இன்டர் நெட் செலவு ஆகியவற்றை அவரே செய்து வருகிறார் என்று சொன்னால், சரிதான்.

6) மேற்படி கடையில் வரும் வருமானமே அவருக்கு போதுமானதாக இல்லை என்றால், சரியல்ல. நான் மளிகை கடை நடத்திவருகிறேன் என்றால், பெட்டிக்கடை நடத்திவந்தேன். கடந்த ஒரு வருடமாக மூடிவிட்டேன். மேற்படி கடையில் ஒரு நாள் வருமானம் நான்காயிரம் முதல் ஆறாயிரம் வரை வருமானம் வருகிறது என்றால், சரியல்ல. அந்த கடையின் வருமானத்தில் எண்ணூறு முதல் ஆயிரத்து எழுநூறு வரை இலாபம் கிடைக்கும் என்றால், சரியல்ல. அந்த

வருமானம் மாதம் இருபத்தைந்தாயிரம் முதல் முப்பதாயிரம் வரை இலாபம் கிடைக்குமென்றால், சரியல்ல. அந்த வருமானமே என்னை பராமரிக்கவும், எனது மருத்துவ செலவிற்கும் போதுமென்றால், சரியல்ல.

7) எதிர்மனுதாரர் உள்ள வீட்டினை வாங்கி எனது இரண்டாவது மகனுக்கு கொடுக்க நான் கேட்டேன் என்றும், அதற்கு எதிர்மனுதாரர் அரசு நிலம் என்று மறுக்கவே எதிமனுதாரருக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால், சரியல்ல. அதன் பின்னர் நான் முதல் மற்றும் இரண்டாவது மகன்களிடம் எவ்வித ஜீவனாம்சமும் கேட்காமல் எதிர்மனுதாரரிடம் மட்டும் ஜீவனாம்சம் கேட்டு மனுசெய்துள்ளீர்கள் என்றால், சரியல்ல. எனது மூத்த மகனையும், எனது இரண்டாவது மகனையும் இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு நிலை நிற்கதக்கது என்று சொன்னால், சரியல்ல. வேண்டுமென்றே எதிர்மனுதாரருக்கு தொல்லை கொடுக்கும் நோக்கில் மற்ற இரண்டு மகன்களுடன் சேர்ந்துகொண்டு இவ்வழிக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

8) நான் என் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டதை தவிர மற்ற அனைத்தும் பொய் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் கடை நடத்தி வருவதாகத்தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், ஒரு மகனிடம் மட்டும் நான் ஜீவனாம்சம் கேட்க முடியாது என்று சொன்னால், சரியல்ல. என்னுடைய வருமானமே என்னை பராமரிக்க போதுமானதாக உள்ளதால் மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சொன்னால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.